சென்னை சட்டக் கல்லூரி.

* 86 வினா—திரு. சோ. ஆறுமுகம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் உள்ள சட்டக் கல்லூரியை பல்லாவரத்திற்கோ அல்லது தாம்பரத்திற்கோ மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன?

(உ) அவ்வாறு மாற்றுவதானால், உயர்நீதி மன்ற நடவடிக்கைகளை மாணவர்கள் கவனிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) சென்னை சட்டக் கல்லூரியை வேறொரு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. ஆனால் குறிப்பாக பல்லாவரத்திற்கோ அல்லது தாம்பரத்திற்கோ மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இப்போது இல்லை.

(இ) உச்ச நீதி மன்றத்தின் (Supreme Court) ஒரு கிளை நீதி பீடத்தை (Branch) சென்னையில் நிறுவினால், அதை உயர்நீதி மன்ற வளாகத்திலுள்ள சட்டக் கல்லூரி கட்டிடத்தில் அமைக்கலாம் என அரசு முடிவெடுத்துள்ளது.

(உ) கல்லூரியை மாற்ற நேர்ந்தால், இதுபற்றித் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : உச்சநீதிமன்றத்தின் கிளை இங்கே அமைய வேண்டும் என்பது எல்லோருடைய வேண்டுகோள். அப்படி அமையவில்லையென்றால், சட்டக் கல்லூரி அதே இடத்திலே இருப்பதில் அரசுக்கு ஆட்சேபனை இல்லையே? சட்டக் கல்லூரியில் உள்ள மாணவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தந்து மேலும் செம்மைப்படுத்தும் நோக்கம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உச்சநீதிமன்றத்தின் கிளை இங்கே வருவதால் நாம் சட்டக் கல்லூரியை மாற்ற வேண்டுமென்று கருதுகிறோம். அப்படி வரவில்லையென்றால், மாற்றுவதாக உத்தேசமில்லை. சட்டக் கல்லூரிக்குத் தேவையான வசதிகள் குறித்து கல்லூரி முதல்வரின் மூலமாக அரசுக்குக் கோரிக்கை அனுப்பினால், அந்த வசதிகளைச் செய்து தர தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

1984 மார்ச் 13]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்தச் சட்டக் கல்லூரியில் படித்தவர்கள். அந்தச் சட்டக் கல்லூரியில் பராமரிப்பு போதவில்லை என்று சொல்லுகிறார்கள். கட்டிடம் பழுதடைந்திருக்கிறது. ஆகவே உடனடியாக தேவையான பராமரிப்பு நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் அந்தச் சட்டக் கல்லூரியில் படிக்கவில்லை. சட்டக் கல்லூரியில் படிக்காமலே பட்டத்தைப் பெற்றிருக்கிறேன். அந்தக் கல்லூரிக்குத் தேவையான வசதிகளைப் பொறுத்த வரையில், அரசு செய்து தரும்.

கடலூரில் நிலத்தடி கழிவுநீர் திட்டம்.

*87 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கடலூரில் நிலத்தடி கழிவுநீர்த் திட்டம் (Underground drainage) செயல்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Madras City Map.

*88 Q.—THIRU S. J. SADIQ PASHA : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether the Government of Tamil Nadu have approved an aerial survey programme to map the Madras Metropolitan area ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS